**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.6 /2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

Deposition of witness for — Prosection pw-12 / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ராஜசுலோசனா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

1, 2, 3, 5, 6 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர். குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. 7, 8, 9 எதிரிகள் ஆஜர் இல்லை.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

26.06.2025

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது சாத்தூர் மகளிர் காவல் நிலைத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.07.2019ம் தேதி நான் வச்சக்காரப்பட்டி காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது கூடுதல் பொறுப்பாக சாத்தூர் மகளிர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது சாத்தூர் மகளிர் காவல் நிலைய குற்ற எண்.10/2019 பிரிவுகள்–294(பி), 494, 506(1) இதச மற்றும் 498(A), 120(B) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

2) வழக்கின் புகார்தாரர் சுலோச்சனா, சாட்சி வேண்டாராஜா, பாலசுப்பிரமணியன், சார்பு ஆய்வாளர் திருமதி. ரேவதி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது விசாரணையை முடித்துக்கொண்டு இந்த வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் சங்கரேஷ்வரி அவர்களிடம்

ஒப்படைத்தேன். **புகார்மனுவின் மீதான நீதிமன்ற உத்தரவு அ.சா.ஆ.5 ஆகவும், 1ம் எதிரிக்கும், அ.சா.1க்கும் நடந்த திருமணத்தின் போது அச்சடிக்கப்பட்ட திருமண அழைப்பிதழ் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) கடந்த 03.07.2019ம் தேதி நான் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பில் பணியாற்றி வந்தேன் என்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் நான் தான் காவல் நிலைய பொறுப்பு அதிகாரி என்றால் சரிதான். எனது ஆலோசனையின் பேரில் தான் சார்பு ஆய்வாளர்கள் பணிபுரிவார்கள் என்றால் சரிதான். Crl.M.P.1188/2019 ஆனது 03.07.2019 ம் தேதி சாத்தூர் குற்றவியில் நீதித்துறை நடுவர் எண் 1 ல் இருந்து எனக்கு அனுப்பப்பட்டு பெறப்பட்டது என்றால் சரிதான்.

2) சாத்தூர் குற்றவியில் நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தின் Diary ல் Investigate and report on or before 04.07.2019 என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் மேற்படி உத்தரவிற்கு நானும், சார்பு ஆய்வாளர் ரேவதி என்பவரும் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவின் பேரில் அன்றைய தினமே யார் யாரை விசாரித்தேன் என்றால் சுலோச்சனா, சாட்சி வேண்டாராஜா, பாலசுப்பிரமணியன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) சாட்சிகளை விசாரிப்பதற்கு சட்டப்படி அழைப்பாணை எதுவும் அனுப்பவில்லை என்றால் போன் மூலம் சாட்சிகளுக்கு தகவல் சொல்லி விசாரித்தேன். புகார்தாரர் தான் கொடுத்த புகாரிலும், வாக்குமூலத்திலும் தான் தற்சமயம் சென்னையில் வசித்து வருகிறேன் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான், அவரது உறவினரான வேண்டாராஜா (மாமாமுறை) அவரது வீட்டில் இருந்ததால் விசாரணைக்கு போன் செய்து அழைத்ததால் அழைப்பு பெற்று நிலையம் ஆஜரானார்.

4) சார்பு ஆய்வாளர் ரேவதி எந்த தேதியல், எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றால் 03.07.2019 ம் தேதி 17.00 மணிக்கு பதிவு செய்தார். நான் அன்றையதினமே 18.00 மணிக்கு எனது விசாரணைக்குஎடுத்துக் கொண்டேன். 03.07.2019 ம் தேதி நீதிமன்ற தபாலானது எத்தனை மணிக்கு எனக்கு

கிடைக்கப்பெற்றதென்றால் அன்றைய தினம் மதியம் நீதிமன்ற காவலர் மூலம் வாங்கி வரப்பட்டது.

5) முதல் தகவல் அறிக்கையானது எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் அன்றையதினம் மாலை 19.00 மணிக்கு நீதிமன்ற காவலர் வசம் ஒப்படைத்து நீதிமன்ற உத்தரவினையும், புகாரினையும் சேர்த்து நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு காவலர் வசம் ஒப்படைக்கப்பட்டது. 04.07.2019 ம் தேதி நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பி வைத்துள்ளேன் என்றால் அது தவறு என்றால் 03.07.2019 ம் தேதி முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலர் வசம் ஒப்படைக்கப்பட்டது, அது இரவு நேரம் என்பதால் அடுத்த நாள் கொடுத்திருக்க வாய்ப்புள்ளது.

6) 03.07.2019 ம் தேதி 18.00 மணிக்கு தான் நான் மேற்படி வழக்கினை விசாரணைக்கு எடுத்துள்ளேன் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் ரேவதி அதற்கு முன்பே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து என் வசம் பதிவு செய்தார் என்றால் சரிதான். Crl.M.P.No.1188/2019 ன் படி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி Crl.M.P க்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் (Investigate and report) என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு அறிக்கையை நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளேன். ஆனால் நீதிமன்ற உத்தரவு அவ்வாறு இல்லை, நான் நீதிமன்ற உத்தரவினை பின்பற்றாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு நீதிமன்றம் அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான்.

7) 1 வது சாட்சி சுலோச்சனா எந்த தேதியில் என்னிடம் புகார் கொடுத்தார் என்றால் என்னிடம் நேரடியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை, புகார்தாரர் 12.06.2019 ம் தேதி விருதுநகர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களிடம் மனு வழங்கியுள்ளார். 10.06.2019 ம் தேதி சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார்தாரர் ஆஜராகி புகார் கொடுத்தார் என்றால் அன்றைய தேதியில் நான் நிலையப் பொறுப்பு அதிகாரி இல்லை.

8) இந்த தபாலானது 03.07.2019 ம் தேதி என்னிடம் வந்த நிலையில் அந்த தேதியில் நான் நிலையப்பொறுப்பு அதிகாரி என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் Crl.M.P.1188/2019 ல் 10.06.2019 சாத்தூர் அனைத்து மகளிர் காவல்

நிலையத்தில் கொடுத்துள்ள புகார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நான் படித்தேன் என்றால் சரிதான். அந்த புகார் மனுவின் பேரில் நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் இவ்வழக்கு பதிவு செய்ததால் அது சம்மந்தமாக எந்த வித விசாரணையும் மேற்கொள்ளவில்லை.

9) என்னிடம் கொடுத்த புகார் மனுவிற்கும், நீதிமன்றம் கொடுத்த உத்தரவிற்கும் ஒரு மாத இடைவெளி உள்ளதென்றால் 22 நாட்கள் இடைவெளி இருக்கும். என்னிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவிற்கு எந்த நடவடிக்கை எடுக்காததற்கு ஏதும் தனிப்பட்ட காரணங்கள் இருக்கிறதா என்றால் எதுவும் இல்லை. அந்த புகாரில் உண்மைத்தன்மை இல்லாததால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பிடியாணையின்றி கைது செய்யக்கூடிய குற்றங்களை உள்ளடக்கி இருந்தும், நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

10) 12.06.2019 ம் தேதி இதே புகார்தாரர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு ஒரு புகார் கொடுத்து பின்னர் மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளரிடம் இருந்து எனக்கு நடவடிக்கை எடுக்கக்கோரி வரப்பெற்றது என்றால் அதுப்பற்றி தெரியாது. அந்த புகார் மனு சம்மந்தமாக எனது நிலையத்திற்கு வரவில்லை என்றும், எந்த நடவடிக்கையும் அதன் நிமித்தம் நான் எடுக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

11) மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார்தாரர் கொடுத்த புகார் மனு வந்ததென்றும் அதில் உண்மைத்தன்மை இல்லை என்பதால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் ரேவதி எனது விசாரணையில் நான் புகார்தாரருக்கு எந்த அழைப்பாணையும் அனுப்பவில்லை, தெரிவிக்கவும் இல்லை அவராகவே 03.07.2019 ம் தேதி காவல் நிலையத்திற்கு வந்தார் என்று கூறியுள்ளார் என்றால் அவ்வாறு தெரிவிக்கவில்லை.

12) இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை 10 நாட்கள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை குறித்து காலம் 8 ல் காரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எதுவும் குறிப்பிடப்படவில்லை. என்னிடம் நேரடியாக கொடுத்த புகாரில் சுமார் 25 நாட்கள் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நான் ஏற்கனவே என்னிடம் புகார்தாரர் இது சம்மந்தமாக புகார் அளிக்கவில்லை என்று தெரிவித்துள்ளேன்.

13) முதல் தகவல் அறிக்கையிலும், நான் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலங்களிலும் 1ம் எதிரிக்கும், 7ம் எதிரிக்கும் எங்கு வைத்து, எந்த தேதியில், எந்தநேரத்தில் திருமணம் நடைபெற்றது என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் குற்றத்திற்கான முகாந்திரம் இல்லை என்பது குறித்து எனக்கு தெரியவந்ததா என்றால் சரியல்ல. புகார்தாரரின் Previous Case History குறித்து நான் தெரிந்து கொண்டேனா என்றால் நிலைய குற்ற எண்.7/2017 U/s.498(A), 323 of IPC r/w 4 of DP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து நிலுவையில் இருந்தபோது எனக்கு தெரியும்.

14) அந்த வழக்கானது 1 முதல் 6 எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விடுதலை பெறப்பட்டது என்றால் நிலுவையில் இருந்தது குறித்து தான் தெரியும், விடுதலை பெற்றது குறித்து எனக்கு தெரியாது. குற்ற எண்.7/2017 உள்ள அதே பிரிவான 498(A) இந்த வழக்கிலும் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழைய வழக்கு கோப்புகளை பார்வையிடுவதன் மூலம் 2015 ம் ஆண்டு முதல் அ.சா.1 மற்றும் 1ம் எதிரியும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்று தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

15) என்னிடம் காண்பிக்கப்படும் மனுரசீது எண்.15/2017 மனு நாள் 25.01.2017 ல் அ.சா.1 மற்றும் 1ம் எதிரியும் அவர்களது குடும்ப பிரச்சனையை நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்கிறோம் என்றும், அ.சா.1 கொடுத்த புகார் மனுவின் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இந்த மனுவினை நான் விசாரிக்கவில்லை. நான் அ.சா.1ன் Previous Case History குறித்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மனுரசீது எண். 15/2017 எங்கள் காவல் நிலையப்பொறுப்பில் இருந்து வருகிறதா என்றால் சரிதான்.

16) நான் அதை பார்வையிடவில்லை என்றால் நான் கூடுதல் பொறுப்பாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அன்றைய தினம் பணிபுரிந்ததால் மேற்படி மனு இரசீது சம்மந்தமாக விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை, பார்வையிடவும் இல்லை. விசாரணை அதிகாரிக்கு மனு எதுவும் கொடுத்தால் அது சம்மந்தமாக முன்னால் வழக்கு பதிவுவேடுகளை பார்வையிட வேண்டும் என்றால் சரிதான், ஆனால் அன்றையதினம் எனக்கு 4 சாட்சிகளை மட்டுமே விசாரிக்க போதிய கால அவகாசம் இருந்ததால் மேற்கொண்டு எதுவும் விசாரணை செய்ய முடியவில்லை.

17) மேற்படி கூறியது விசாரணை குறைபாடு என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 1ம்எதிரிக்கும், அ.சா.1க்கும் 2017 ம் ஆண்டே சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து பெறப்பட்டுள்ளது என்ற விவரம் எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் அது குறித்து தென்படவில்லை. 2முதல் 4 சாட்சிகள் அ.சா.1ன் நெருங்கிய உறவினர்கள் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான்.

18) உறவினர்களை தவிர்த்து நான் வேறு தனிப்பட்ட சாட்சிகளை சம்பவம் குறித்து சம்பவ இடமான வெற்றிலையூரணி கிராமத்திற்கு சென்று விசாரிக்க தோனவில்லை என்றால் அதற்கான கால அவகாசம் இல்லாததால் சம்பவ இடம் சென்று வேறு யாரையும் விசாரிக்கவில்லை. நான் விசாரித்த சாட்சிகளை காவல் நிலையத்தில் மட்டும் தான் வைத்து விசாரித்தேன் என்றால் சரிதான். வழக்கினை நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும், நான் விசாரித்த சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

19) எனதுவிசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கில் கூறப்பட்டுள்ள சம்பவத்திற்கும் 1 முதல் 6 எதிரிகளுக்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை என்றாலும், இது ஒரு பொய் வழக்கு என்று சொன்னாலும் சரியல்ல.